## சாலைப் பாதுகாப்பு! உயிர்ப் பாதுகாப்பு!

# கோவை மருத்துவர் இராஜசேகரன் முன்னெடுப்பு பாராட்டுக்குரியது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, அக்.10-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**சாலைப் பாதுகாப்பு! உயிர்ப் பாதுகாப்பு!**

**“உயிர்” அமைப்பின் வழியாக இதனை மக்களிடம் எடுத்துச் சொல்லி விழிப்புணர்வை ஏற்படுத்திடும் கோவை கங்கா மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் இராஜசேகரன் அவர்களது முன்னெடுப்பு பாராட்டுக்குரியது.**

**சட்டதிட்டங்களை மதித்து சாலைப் பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்க அனைவரும் உறுதியெடுக்க வேண்டும்! இதற்கான விழிப்பு ணர்வை நாம் அனைவரும் ஏற்படுத்திட வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## இரா.துரைராஜ் – எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் 168 – 172 வார்டுகளில்

# ரூ.5.93 கோடி மதிப்பில் 5 இழுவிசை கூரையிலான பேருந்து நிழற்குடைகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பணிகளை தொடங்கி வைத்தார்!

சென்னை, அக். 10 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா சுப்பிர மணியன் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி, அடையாறு மண்டலத்திற்குட்பட்ட ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலை மற்றும் கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் சிட்கோ அலுவலக சாலை ஆகிய பகுதிகளில் ரூபாய் 5.93 கோடி மதிப்பீட்டில் புதிய இழுவிசை கூரையிலான 5 பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணிகளை நேற்று (9.10. 2025) அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

நேற்று (9.10.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .மா. சுப்பிரமணியன் , சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அடையாறு மண்டலம், வார்டு 168 ல், ஈக்காட்டுத்தாங்கல் 100 அடி சாலையில் இரண்டு பேருந்து நிறுத்த ங்கள்,

கிண்டி ரேஸ் கோர்ஸ் சாலையில் ஒரு பேருந்து நிறுத்தம், வார்டு 172ல், கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் உள்ள சிட்கோ அலுவலக சாலையில் 2 பேருந்து நிறுத்தங்கள் என இந்த இடங்களில் ஏற்கனவே உள்ள பேருந்து நிழற்குடைகளை அகற்றிவிட்டு, அந்த இடங்களில் ரூபாய் 5.93 கோடி மதிப்பீட்டில் இழுவிசை கூரையிலான 5 புதிய பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து, அமைக்கப்படவுள்ள புதிய பேருந்து நிறுத்தங்களின் வரைபடங்களைப் பார்வையிட்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் துணை மேயர் .மு.மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் ஆர். துரைராஜ் (அடையாறு), எம்.கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்), மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மாநகராட்சியின் அதிகாரிகள், பகுதி அவைத்தலைவர் இ.முருகேசன், பகுதி பொருளாளர், அருணகிரி, வட்ட கழக செயலாளர்கள், இராதாகிருஷ்ணன், நேருநகர் எஸ்.பாட்சா, வே. முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## தாமரைப்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற

# ‘உங்களுடன்ஸ்டாலின்’சிறப்புதிட்டமுகாம்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் அக் 10 திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், தாமரைப்பாக்கம் ஊராட்சியில் உள்ள ஜனனி திருமண மண்டப வளாகத்தில் தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது.

இதில், தாமரைப்பாக்கம், சேத்துப்பாக்கம்,கொமக்கம்பேடு ஆகிய மூன்று ஊராட்சிகளை சேர்ந்த கிராம மக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கினர். இதில்,15 துறைகளின் 35 சேவைகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டு பொதுமக்கள் மீதான மனுக்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொண்ட

பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை பல்வேறு சான்றிதழ்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், திருவள்ளூர் தாசில்தார் பாலாஜி எல்லாபுரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குணசேகரன், மணிசேகர் , ஒன்றிய செயலாளர் தங்கம் முரளி, டி.பாஸ்கர், பி.ஜி.முனுசாமி, ஜி.அன்பு, எபினேசர், ரகு, ஸ்ரீதர் ,ராகேஷ் , ஜெகன் ,ஆளவந்தான் , தங்கராஜ், ராகவேந்தர், சரவணன், துளசிராமன், தாஸ் டி.சர்தார், ஜி.சங்கர், ஆனந்தன், மதிவாணன், முனுசாமி, அழகேசன், செல்வம், பிரகாஷ் , தீனதயாளன், டி. முகமது ரஃபி , ரவிச்சந்திரன் , சீனிவாசன், கார்த்திக் , திவாகர் கௌதம், திமுக நிர்வாகிகள் , அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள்,ஊழியர்கள், பணியாளர்கள்,பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு,

# 2,783 மெட்ரிக் டன் மண் - மண் துகள்கள் அகற்றம்!

## சென்னை மாநகராட்சி தகவல்

சென்னை,அக்.10- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுலின்படியும், பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மழைநீர் வடிகால்கள் கட்டுதல், கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் சேகரிப்புத் தொட்டிகளில் தூர்வாருதல், அனைத்து கல்வாய்களிலும் தூர்வாரி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளுதல், குளம், ஏரி உள்ளிட்ட நீர்நிலைகளை மேம்படுத்தி மழைநீரினை அதிகளவில் சேகரித்தல், மரக்கிளைகளை அகற்றுதல் உள்ளிட்ட தொடர்புடைய பணிகள் அனைத்தும் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, மழைக்காலங்களில் பேருந்து சாலைகள் மற்றும் அனைத்து உட்புறச் சாலைகளின் ஓரங்களில் படிந்துள்ள மண் மற்றும் மண் துகள்கள் மழைநீரோடு சென்று வண்டல் சேகரிப்புத் தொட்டியிலும், அதன் மூலமாக மழைநீர் வடிகால்களிலும் சென்று அடைப்பை ஏற்படுத்தி மழைநீர் செல்வதில் தடை ஏற்படுவதைத் தடுத்திடும் வகையில், சாலைகளின் ஓரங்களில் படிந்துள்ள மண், மண் துகள்கள் மற்றும் சிறு சிறு குப்பைகள் அகற்றும் பணியானது பணியாளர்களாலும், இயந்திரப் பெருக்கிகளின் வாயிலாகவும், கடந்த 26.09.2025 முதல் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 26.09.2025 முதல் 08.10.2025 வரையிலான 13 நாட்களில் பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலைகளின் ஓரங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மண் மற்றும் மண் துகள்கள் அகற்றும் பணியின் மூலம் 7,749 உட்புறச் சாலைகள் மற்றும் 86 பேருந்து சாலைகள் என மொத்தம் 7,835 சாலைகளில் இருந்து 2,783 மெட்ரிக் டன் மண் மற்றும் மண் துகள்கள் அகற்றப்பட்டுள்ளன. இதர பேருந்து சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகளில் இந்தப் பணியானது தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மழைக்காலங்களில் சாலைகள், தெருக்கள் மற்றும் பொது இடங்களில் ஏற்படும் மழைநீர் த்தேக்கத்தினை தவிர்த்திடும் வகையிலும், மக்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்திடும் வகையிலும் மாநகராட்சியின் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கைப் பணிகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டில் ராஜலட்சுமி நகரில் உள்ள சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு இரண்டாம் பருவம் புத்தகங்களை மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பெ.மணிமாறன் வழங்கினார். உடன் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.




ஆலந்தூர் தெற்கு பகுதி 167வது வட்டத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன், வட்டச் செயலாளர் ஜெ. நடராஜன் ஆகியோர் தலைமையில் நேற்று ஸ்கேட்டிங் மைதானம் 100 அடி சாலையில் நடைபெற்றது. இதில் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் 12 வது மண்டல குழு தலைவர் என். சந்திரன் பயனாளிகளுக்கு உரிய சான்றிதழ்களை வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## தமிழ்நாடு தொழில் நுட்ப மையம் –

# மெல்போர்ன் பல்கலைக்கழகம் இடையே நோக்குக் கடிதம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை,அக்.10- சென்னை, அக்டோபர் 9, 2025: இந்தியாவின் முதல் வலையமைப்பான தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub), ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகம் உடன் இன்று நோக்குக் கடிதத்தில் (LoI) கையெழுத்திட்டது. இந்நிகழ்வு, தமிழ்நாட்டின் புத்தாக்க சூழலையும் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் புதுமை அமைப்பையும் இணைக்கும் நோக்கத்துடன் நடைபெற்றது.

இந்த நோக்குக் கடிதம் ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், ஸ்டார்ட்அப்புகள், புதுமையாளர்கள், தொழில்துறை நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்கள் ஆகியோருக்கிடையில் நீண்டகால ஒத்துழைப்பை உருவாக்கும் வகையில் இரு நாடுகளின் புத்தாக்க சூழலை வலுப்படுத்துகிறது.

இந்நிகழ்வில், மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் உப துணைவேந்தர் (உலகளாவிய கலாச்சாரம் மற்றும் ஈடுபாடு) பேராசிரியர் மைக்கேல் வெஸ்லி, மற்றும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் (iTNT Hub) தலைமை செயல் அலுவலர் திருமதி. வனிதா வேணுகோபால் ஆகியோர் நோக்குக் கடிதத்தை பரிமாறிக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் டாக்டர். பழனிவேல் தியாகராஜன், ஆஸ்திரேலியாவின் தலைமைத் தூதர் திருமதி சிலை ஜாகி, மற்றும் தகவல் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மை செயலர் திரு. ப்ரஜேந்திர நவ்நித், ஐ.ஏ.எஸ். ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub), செயற்கை நுண்ணறிவு (AI/ML), விரிவான மற்றும் மெய்நிகர் உண்மை (AR/VR), பொருள்களின் இணையம் (IoT), ரோபோட்டிக்ஸ், செமிகண்டக்டர் மற்றும் குவாண்டம் கணினி ஆகிய முன்நிலை தொழில்நுட்பங்களை முன்னெடுத்து, ஸ்டார்ட்அப்புகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு புத்தாக்க மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கும் தளமாக செயல்படுகிறது.

திருமதி வனிதா வேணுகோபால் கூறியதாவது: “தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT) - மெல்போர்ன் பல்கலைக்கழக இணைப்பு இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவுக்கிடையில் ஸ்டார்ட்அப்புகள், கல்வியாளர்கள் மற்றும் தொ ழில்துறைகளை இணைக்கும் வலுவான புத்தாக்க சூழலை உருவாக்கும். இரு நிறுவனங்களும் இணைந்து கூட்டு வளர்ச்சி முடக்கத் திட்டம் (Acceleration) திட்டங்களை வடிவமைத்து, ஸ்டார்ட்அப்புகள் மற்றும் வழிகாட்டிகளுக்கிடையேயான பரிமாற்றங்களை ஊக்குவித்து, தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் தொழில்முனைவு வளர்ச்சியை ஊக்குவிக்க உள்ளன. முதலீட்டாளர் இணைப்புகள் மற்றும் இணை கல்வி வலையமைப்புகளும் இதன் மூலம் மேம்படுத்தப்படும்.,” என தெரிவித்தார்.

மெல்போன் பல்கலைக்கழகத்தின் உப துணை வேந்தர் பேராசிரியர் மைக்கேல் வெஸ்லி கூறியதாவது:

“மெல்போர்ன் பல்கலைக்கழகமும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையமும் (iTNT Hub) இணைந்து இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா சந்திக்கும் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார சவால்களுக்கு தீர்வுகளை உருவாக்கும் திறனைக் கொண்டுள்ளன. இரு அமைப்புகளுக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு, புத்தாக்க மற்றும் இணை உருவாக்கத்திற்கு வாய்ப்புகளை உருவாக்கும்,” என்றார்.

அவர் மேலும் கூறியதாவது: “நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால், புதிய தொழில்நுட்பங்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஸ்டார்ட்அப்புகளுக்கிடையிலான உறவு களை வலுப்படுத்தவும், புதிய அணுகுமுறைகளை உருவாக்கவும் முடியும். மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் புத்தாக்க அமைப்பு உலகளவில் விரிவடைந்து, மேலும் பல கூட்டாண்மைகளை உருவாக்கும் என்பது எங்களின் நோக்கம்,” என உப துணைவேந்தர் குறிப்பிட்டார்.

## உளுந்தூர்பேட்டை எல்லை கிராமத்தில்

# பாம்பு கடித்து உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 10 - கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், எல்லை கிராமத்தில் விஷப்பாம்பு கடித்து உயிரிழந்தவரின் குடும்பத்தி னருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

அவரது அறிவிப்பு வருமாறு:?

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், எல்லை கிராமத்தில் வசிக்கும் திரு.விநாயகமூர்த்தி (வயது 23) த/பெ.ஜெயராமன் என்பவர் கடந்த 04.10.2025 அன்று மேற்படி கிராமத்தில் உள்ள அவரது வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக விஷப்பாம்பு கடித்து உடனடியாக சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று (09.10.2025) காலை சுமார் 06.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பங்கேற்கும்

# சென்னை தெற்கு மாவட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட சைதாப்பேட்டை, விருகம்பாக்கம், வேளச்சேரி, மதுரவாயல், சோழிங்கநல்லூர் ஆகிய ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் நியமிக்கப்பட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாளை 11-10-2025 - சனிக்கிழமை காலை 10 மணியளவில், நீலாங்கரையில் உள்ள ராணி மகாலில் (புளூ லகூன்) மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச்செயலாளர் - நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

எனவே சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட தொகுதிப் பார்வையாளர்கள், பாகப் பொறுப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.



கோட்டுப்புரம், , சர் சி. வி. ராமன் அறிவியல் கூட்ட அரங்கில் முனைவர் பழனிவேல் தியாகராஜன் ஆழ்நிலை மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப புத்தாக்க ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் தமிழ்நாடு தொழில் நுட்ப மையம் (ITNT Hub) மற்றும் மெல்போர்ன் பல்கலைக்கழகம் இடையே நடைபெற்ற நோக்குக்கடிதம் கையெழுத்து ஒப்பந்த நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் ஆஸ்திரேலியாவின் தலைமைத் தூதர் சிலைஜாகி, துறை முதன்மைச் செயலாளர் ப்ரஜேந்திர நவ்னிட், மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் உபதுணைவேந்தர் பேராசிரியர் மைக்கேல்வெஸ்லி, தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் (ITNT Hub) தலைமைச் செயல் அலுவலர் வனிதாவேணுகோபால் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரவாயல் தொகுதி 92 வது வட்டத்தில் பொதுமக்களின் முகப்பேர் மேற்கில் எஸ்.கே.வி. மஹாலில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மண்டலகுழு தலைவர்கள் நொளம்பூர் வே.ராஜன், பி. கே.மூர்த்தி, வட்டச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம், கே.வி. திலகர், வட்ட செயலாளர் ரமேஷ் ராஜா, கே.நீலகண்டன், எம்.ஏ. செந்தில்சுரேஷ், கே.குமரேசன், எம்.சி.எழில்அரசு ஏ.ஜி.வேலன், டாக்டர் எம் .சி.அழகிரி. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

